# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2040 (வைகாசி- ஆனி) ஜூன் 2010 ஏர்-25, உழவு-6, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
BRT.சென்னியப்பன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : BRT.சென்னியப்பன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | செல்வி ஃபீட்ஸ் கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்


| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| செயலாளர் அறிக்கை | - | 3 |
| மாளிகை திறப்பு விழா | - | 5 |
| குடும்ப விழா 2010 | - | 27 |
| மணமகன் தேவை | - | 28 |
| மணமகள் தேவை | - | 29 |
| மணமகன் தேவை | - | 31 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே ! வணக்கம்.



சென்னையின் பிரதான சாலையில் கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கு ஒரு முகவரி வேண்டுமென்பது கொங்கு சமுதாயத்தின் நீண்ட நாள் கனவு. இந்தக் கனவை நனவாக்க முன்னாள் தலைவர் கே. பாலசுப்பிரமணியன் தலைமையில் இருந்த செயற்குழு பீட்டர்ஸ் சாலையில் இடத்தை வாங்கியது. மறைந்த தலைவர் கே.ஆர்.பி.மோகன் தலைமையில் இருந்த செயற்குழு, தங்களுடைய செயற்குழுவின் காலத்திற்குள் கட்டடத்தைக் கட்டித் திறப்புவிழாவை நடத்திட முனைப்போடு செயல்பட்டது. தலைவர் மோகன் மறைந்தாலும் அதே வேகத்தோடு செயல்பட்டு ஏப்ரல் 18 ஆம் தேதி திறப்புவிழா நடத்தப்பட்டது. கொங்கு சமுதாயத்தினுடைய கனவை நிறைவேற்றுகின்ற தருணத்தில் நான் தலைவராக இருப்பதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கட்டிடம் திறப்பதிலே பல பிரச்சனைகள் இருந்தாலும், நிதி பற்றாக்குறையிருந்தாலும் உதவ முன்வந்த சமுதாய உணர்வுள்ள அத்தனை பேருக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த விழாவிலே சமுதாயப் பெரியோர்கள் கலந்து கொண்டது மிக்க மகிழ்ச்சி.

தீரன் சின்னமலை மாளிகை என்று பெயர் சூட்டப்பட்ட இந்தக் கட்டிடம் சின்னமலையின் பிறந்த நாளுக்கு அடுத்தநாள் திறந்தது விழாவுக்கு மேலும் சிறப்பு ஊட்டியது. நானும் என் செயற்குழுவும் இன்னும் திறம்பட சமுதாய சேவை செய்ய ஊக்கம் தருகின்ற வகையிலே பேசிய சமுதாயப் பெரியவர்களை மறக்க முடியாது. கட்டிடத் திறப்பு விழாவிற்கு முன் தலைவிரித்தாடிய பணப் பற்றாக்குறை விழா அன்றைக்கே தீர்ந்து போனது. நிதி அளித்தவர்கள் அத்தனை பேருக்கும் என் சிரம் தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விழாவிலே திரளாக கலந்துகொண்ட சங்க உறுப்பினர்களுக்கும், விருந்தினர்களுக்கும் நன்றி. முழு நேரப்பணியாக செயலாளர் பரணி பாலுவும், பொருளாளர் பெர்லக்ஸ் செல்வராஜி யும் செயல்பட்டாலும் எல்லோரும் பாராட்டிய விழா நிகழ்ச்சியில் செயற்குழு ஓர் அணியாக நின்று செயல்பட்டது எல்லோருக்கும் தெரிந்தது.

பீட்டர்ஸ் சாலையில் கம்பீரமாக நின்றுகொண்டு இருக்கும் தீரன் சின்னமலை மாளிகையைப் பார்த்து வியக்காதவர்கள் கிடையாது. வெகுவிரைவிலே இந்த ஆண்டு குடும்பவிழா வர இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் இந்த மாதத்திலிருந்து தொடங்கும். எல்லா உறுப்பினர்களுமே அதில் கலந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். எவ்வளவு வேலைகள் இருந்தாலும், சொந்தங்களைச் சந்திக்கின்ற வாய்ப்பை நழுவவிடக் கூடாது. கட்டிடப் பணியிலும் விழா ஏற்பாடுகளிலும் பங்கெடுத்துக்கொண்ட செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன்.

நம்மால் முடியும் !!

அன்புடன்
BRT சென்னியப்பன்

# செயலாளர் அறிக்கை

அன்புடையீர், வணக்கம்.



சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் கடந்த 45 ஆண்டுகளில் பல சாதனைகள் புரிந்து வந்து இருக்கிறது. சங்கத்தின் இரண்டாவது கட்டடமான 'வெள்ளி விழா' இல்லக் கட்டடப்பணி பொறுப்பையும், மூன்றாவது கட்டடமான தீரன்சின்னமலை மாளிகையின் கட்டடப்பணி பொறுப்பையும் ஏற்று சிறப்பாக கட்டி முடித்து திறப்புவிழா நடத்தியதில் எனக்கு கொங்கு மக்களுக்காக சேவை செய்த மனதிருப்தி ஏற்பட்டது.

தீரன் சின்னமலை மாளிகையின் இடம் கொங்கு நண்பர்கள் சங்கமும், கொங்கு நாடு அறக்கட்டளையும் சேர்ந்து சரிபாதி பங்குடன் வாங்கப்பட்டது. பிறகு கொங்குநாடு அறக்கட்டளை, இடத்தை சங்கத்திற்கே விட்டுக்கொடுத்து. கொங்கு நாடு அறக்கட்டளைக்குத் தர வேண்டிய ரூபாய் 60 லட்சத்தை வட்டியுடன் திரும்பக் கொடுத்து பத்திரப் பதிவு செய்வது என முடிவு எடுக்கப்பட்டது. சங்கம் கேட்டவுடன் இடத்தை விட்டுக் கொடுத்து உதவிய கொங்கு நாடு அறக்கட்டளையின் தலைவர் அருட்செல்வர் கொங்கு மாமேதை திரு.என்.மகாலிங்கம் அய்யா அவர்களுக்கும், செயலாளர் டி.கே.சுப்ரமணியன், பொருளாளர் திரு. அருணாசலம் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் இந்தக் கட்டடம் வாங்க உறுதுணையாக இருந்த முன்னாள் தலைவர்கள் திரு. கே.பாலசுப்பிரமணியன் மற்றும் திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயற்குழு தீர்மானத்தின்படி கட்டடம் கட்டும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட எனக்கு இந்த மூன்று வருடமும் இந்த வேலை ஒரு சவாலாகவே இருந்தது. கொங்கு சமுதாயத்திற்கு, சங்கத்திற்குத் தொண்டாற்ற ஓர் அரிய வாய்ப்பாக இதை நான் எடுத்துக்கொண்டதால், நான் இதற்காகப்பட்ட கஷ்டங்களும், சந்தித்த சவால்களும், தடைகளும், சங்கத்தின் நிதிப்பற்றாக்குறையும் அதனால் ஏற்பட்ட கட்டடவேலைத் தொய்வுகளும் எனக்கு சலிப்பையோ சங்கடத்தையோ ஏற்படுத்தவில்லை. மாறாக, ஒரு லட்சியக் கனவை வெற்றிகரமாக நிறைவேற்றிட வேண்டும் என்ற தீவிர உந்துதலே மனத்தில் இருந்தது. 18-04-2010 அன்று தீரன் சின்னமலை மாளிகை எனப்பெயர் சூட்டப்பட்டு, திறப்பு விழா நடந்தபோது இம்மாளிகை மிகவும் சிறப்புறக் கட்டப்பட்டுள்ளதாகக் கூறி, பலரும் எனக்குப் பாராட்டு தெரிவித்த போது, சங்கம் நிகழ்த்திய முத்தாய்ப்பு சாதனை இது என்று சான்றோர்கள் பலரும் கூறியபோது, நான் பட்ட கஷ்டங்கள் வீண்போகவில்லையென்பதோடு, தற்போது மனத்தில் மகிழ்ச்சியும், நிறைவும் ஏற்பட்டுள்ளது. இந்த நேரத்தில் இம்மாளிகை உருவாகக் காரணமாக உழைத்த உழைப்பாளிகளுக்கும், நன்கொடையளித்த கொங்கு சொந்தங்களுக்கும், எனக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுத்து துணைநின்ற பொருளாளர் செல்வராஜ் மற்றும் சங்க நிர்வாகிகளுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். இம்மாளிகை கட்ட முக்கிய ஆலோசனை வழங்கி எனக்கு எல்லா வகையிலும் பக்கபலமாக நின்று உதவி, வழிகாட்டிய அமரர் கொங்குக் குலமணி திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்களுக்கு எனது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறேன்.

நன்றி.

பரணி கே.பாலசுப்பிரமணி
செயலாளர்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 55,38,943 |
| 934 | | M.சோமசுந்தரம் | 1,000 |
| 935 | | பரமகுருகதிரம் | 1,000 |
| 936 | | K.P.குகன் | 1,000 |
| 937 | | சக்தி அம்பாள்மங்கை | 1,000 |
| 938 | | T.R.தங்கவேல் | 1,000 |
| 939 | | S.மதிவாணன் | 1,000 |
| 940 | | K.M.வேல்ராஜ் | 1,000 |
| 941 | | D.கார்த்திகா தேவி | 1,000 |
| 942 | | K.மோகன் | 1,000 |
| 943 | | V.நவீன் | 1,000 |
| 944 | | K.திவ்யா | 1,000 |
| 945 | 135 | S.தேவராஜன் | 1,234 |
| 946 | | A.தரணிவானவள்ளி LH | 1,000 |
| 947 | | M.மோனிகா LH | 1,000 |
| 948 | | B.புவனேஷ் G.H | 1,000 |
| 949 | | அஜய்குமார் G.H | 1,000 |
| 950 | | நடராஜ் | 1,000 |
| 951 | | K.அருள் | 1,000 |
| 952 | | G.K.நாகராஜ் | 1,000 |
| 953 | | P.கருணாநிதி | 1,000 |
| 954 | | R.வெங்கடாசலம் | 1,000 |
| 955 | 748 | M.தாமோதரசாமி | 1,001 |
| 956 | | K.பிரியங்கா L.H | 1,000 |
| 957 | | S.S.லவகுமார் G.H | 1,000 |
| 958 | | K.பரிமளா L.H | 1,000 |
| 959 | | M.அபிராமி L.H | 1,000 |
| 960 | | M.மோனிகா L.H. | 1,000 |
| 961 | | சுரேஷ் G.H. | 1,000 |
| 962 | | V.மாலதி | 1,000 |
| 963 | 743 | S.கௌதமன் | 1,000 |
| 964 | | T.கார்த்தீஸ்வரன் | 7,000 |
| 965 | | T.கார்த்திகேயன் | 1,000 |
| 966 | | K.பெரியசாமி | 1,000 |
| 967 | | S.ரமேஷ்கண்ணா | 1,000 |
| 968 | | S.இளங்கோ | 1,000 |
| 969 | | K.ரவிக்குமார் | 1,000 |
| 970 | | D.V.வீரஜவஹர் | 1,000 |
| 971 | | V.விபீஷணன் | 1,000 |
| 972 | | P.கதிரேசன் | 1,000 |
| 973 | | M.N.திருநாவுக்கரசு | 1,000 |
| | | மொத்தம் | 56,85,178 |

# தீரன் சின்னமலை மாளிகை திறப்பு விழா

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சாதனை மகுடத்தில் வைரக்கல்லாக பதிக்கப் பெற்றுள்ள கொங்கு மாவீரன் ‘தீரன்சின்னமலை மாளிகை’ திறப்பு விழா 18-04-2010 ஞாயிற்றுக்கிழமை அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு வந்தவர்கள் அனைவரையும் தலைவர் திரு.சென்னியப்பன், துணைத் தலைவர் திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன், செயலாளர், திரு.பரணி கே.பாலசுப்பிரமணி, பொருளாளர் திரு. ஆர்.செல்வராஜ் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் இருகரம் கூப்பி, அன்புடன் வரவேற்றனர்.

தீரன் சின்னமலை மாளிகையின் தரைத் தளத்தை, ஈரோடு சக்தி மசாலா நிறுவனங்களின் இயக்குநரும், தொழிற்துறையில் சாதனைகள் படைத்ததற்காக உயரிய விருதுகள் பல பெற்றவரும், மாற்றுத் திறன் படைத்தோருக்கும், ஏழை மாணவர்களுக்கும் எண்ணற்ற உதவிகள் செய்துவருபவரும், சங்கத்திற்குக் கேட்காமலேயே பெரும் நிதியுதவி அளித்துவருபவருமான கொங்கு குலக்கோதை திருமதி சாந்தி துரைசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

மாளிகையின் முதல் தளத்தைத் திரையுலக மார்கண்டேயரும், திறம் மிக்க ஓவியரும், சிறந்த எழுத்தாளரும், கம்பராமாயண சொற்பொழிவில் வியத்தகு சாதனைபடைத்து மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவரும், கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருபவருமான கலைமாமணி, கம்பன் காதலன் திரு. சிவகுமார் அவர்கள் திறந்து வைத்தார்.

மாளிகையின் இரண்டாம் தளத்தை, கரூர் கொங்கு கல்வி அறக்கட்டளை தலைவரும், கரூர் மயானத்தை அழகிய சுற்றுலாத்தலம் போல் உருவாக்கிய கொடையாளரும், சங்கத்திற்கு மிக அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களைத் சேர்த்து சாதனை படைத்தவரும், கொங்கு சாதனையாளர் விருது பெற்றவருமான திரு. அட்லஸ் நாச்சிமுத்து அவர்கள் திறந்து வைத்தார்.

மாளிகையின் ‘கே.ஆர்.பி.மோகன் அரங்க’த்தை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவரும், சங்கத்தின் முன்னாள் தலைவரும், பாரதியார் சங்கத் தலைவரும், தமிழ் அகாடமி தலைவரும், கொங்கு நாடு அறக்கட்டளையின் துணைத் தலைவரும், சிறந்த பேச்சாளருமான மூத்த வழக்கறிஞர் கொங்குமாமணி இரா.காந்தி அவர்கள் திறந்து வைத்தார்.

பின்னர், மோனகன் மகளிர் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் கொங்குச் சான்றோர்கள் வாழ்த்துரை வழங்கும் விழா தொடங்கியது. விழாவிற்குச் சங்கத் தலைவர் திரு. பிஆர்டி. சென்னியப்பன் தலைமை தாங்கினார். சங்கச் செயலாளர் திரு. பரணி கே.பாலசுப்பிரமணி முன்னிலை வகித்தார். தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா நிகழ்ச்சிகள்

தொடங்கின. சங்கத் துணைத் தலைவரும், கொங்குநாடு முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளருமான திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் வரவேற்புரையாற்றினார். சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. கே.ஆர்.பி. மோகன் அவர்களின் மறைவிற்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு.பிஆர்டி. சென்னியப்பன் அவர்கள் தனது தலைமையுரையில் தீரன் சீன்னமலை மாளிகை கட்டியதிலும், சங்கத்தின் வளர்ச்சியிலும் முன்னாள் தலைவர் திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்களின் பெரும்பங்கை நினைவு கூர்ந்தார். தலைமைப்பொறுப்பு அளித்த சங்கத்தின் செயற்குழுவிற்கு தனது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டார். கொங்கு சமுதாயச் சான்றோர்கள் பெருமளவு இந்த விழாவில் கலந்து கொண்டதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டதோடு, இச்சிறப்புமிகு மாளிகை உருவாக்கத்தில் பெரும் பங்கு கொண்ட திருமதி பாரதி செங்கோட்டுவேல், செயலாளர் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி, பொருளாளர் திரு.ஆர்.செல்வராஜ் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

திரு. **ஈ.ஆர்.ஈஸ்வரன்** தன்னுடைய உரையில் கூறியதாவது :

“இது அருமையான விழா. மூன்று ஆண்டுகள் காத்திருந்து, இம்மாளிகையைக் கட்டி இந்த விழா நடக்கிறது. இது அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. முன்னாள் தலைவர் திரு.கே.ஆர்.பி. மோகன் அவர்களையும், அவர் ஆற்றிய தொண்டினையும் யாரும் மறக்க முடியாது. குறிப்பாக, இந்தக் கட்டிடத்தைப் பார்க்கும் போது அவரைப் பற்றிய நினைவுகளை யாரும் மறக்க முடியாது. கட்டடம் வளர முக்கியக் காரணம் திரு.கே.ஆர்.பி.மோகன் என்பதை யாரும் மறந்து விட முடியாது. ‘பணத்தைப் பற்றிக் கவலைப் படாதீர்கள், நான் கொடுக்கிறேன்’’ என்று கூறினார். அப்படிப்பட்டவரை நினைவு கூறுவது அவசியம்.

சங்கத்திற்கு, எந்தக் கட்டடமாக இருந்தாலும் அதைத் திருமதி பாரதி செங்கோட்டுவேல் அற்புதமாக வடிவமைத்துக்கொடுத்து வந்துள்ளார். இம்மாளிகையையும் சிறப்புற வடிவமைத்த அவருக்கு நன்றி சொல்லித்தான் ஆக வேண்டும். ‘அதை நான்தான் செய்வேன்’ என்று உரிமையாகச் சொன்னார். அவர் தொழில் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன். திரு. பரணி பாலு இல்லாமல் இக்கட்டடம் வந்திருக்காது. சொந்தக்கட்டடம் போல் பாவித்து திரு. பரணி பாலுவும், திரு. செல்வராஜ் அவர்களும் பணிகளையாற்றியுள்ளனர். இக்கட்டடம் அமைய முக்கிய, முதற்காரணம் திரு.பரணி பாலு. எங்கள் செயல்பாடுகளுக்கு முன்னோர்கள்தான் காரணம். அவர்கள் தான் வழிகாட்டிகள். தீரன் சின்னமலை மாளிகை என்று பெயர் வைக்கலாம் என முடிவெடுத்த அடுத்த கணம் முதல் கட்டடப்பணி வேகப்பட்டது. இது மிகவும் ஆச்சரியமான செய்தி. இக்கட்டடத்திற்காக உழைத்த அத்தனை பேருக்கும் நன்றி. நினைவுப் பரிசு கூட வாங்கிக் கொள்ளாமல் அமைதியாக உள்ளார், திரு. பரணி பாலு. நிறைய பணி புரிவதோடு மிகுந்த ஈடுபாடு கொண்டு உழைக்கும் அவரை சங்கம் மறக்க முடியாது. அவருக்கு என் சார்பில் ஒரு (Bracelet) தங்கச் சங்கிலி அன்பளிப்பாக அளித்து மகிழ்கிறேன்”.

இவ்வாறு திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்கள் பேசினார். தனக்களிக்கப்பட்ட தங்கச் சங்கிலியை சங்கத்திற்கே நன்கொடையாக திரு.பரணி பாலு கொடுத்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து சங்கச் செயலாளர் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி அறிக்கை வாசித்து, உரையாற்றினார்.

**தீரன் சின்னமலை மாளிகை திறப்பு விழாவில் - செயலாளர் அறிக்கை**

நேற்று தீரன் சின்னமலையின் 255 வது பிறந்தநாள். இன்று தீரன் சின்னமலை மாளிகை திறப்பு விழா. சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சாதனைகளில், மேலும் ஒரு வரலாற்றுச் சாதனையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள இம்மாளிகை திறப்பு விழாவில் கலந்து கொண்டுள்ள உங்கள் அனைவரையும் சங்கத்தின் செயலாளர் என்ற முறையில் அன்புடன் வரவேற்பதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் கொள்கிறேன்.

இந்த இனிய விழா, இரண்டு முக்கிய அம்சங்களால் பெரும் சிறப்பு பெறுகிறது. ஒன்று வெள்ளையரைக் கதிகலங்கச் செய்த மாவீரன், ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு, தாய் நாட்டைக் காக்க இன்னுயிர் ஈந்த வீர மறவன், வெள்ளையர்களை மூன்று முறை போரில் வென்று, இறுதியில் தன்மானத்துடன் மரணத்தைத் தழுவி, தமிழ்நாட்டிற்கும், குறிப்பாக கொங்கு நாட்டிற்கும் பெரும் பெருமை தேடித்தந்த கொங்கினக் கோமான் - தீரன் சின்னமலை பெயர் இம்மாளிகைக்குச் சூட்டப்பட்டுள்ளதாகும்.

இரண்டாவது சிறப்பு - இந்த விழாவில் கொங்கு சமுதாய முன்னோடிகள், தத்தம் துறைகளில் பெரும் சாதனை படைத்தவர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பதாகும். தங்களுடைய அரிய சாதனைகளால் கொங்கு சமுதாயத்திற்குப் பெரும் பெருமை சேர்த்துவரும் இச்சான்றோர்கள் கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கு சிறந்த வழிகாட்டிகளாகவும், தக்க உதவிகள் செய்து ஆலோசனைகள் கூறுபவர்களாகவும் உள்ளனர்.

உலகெங்கும் வாழும் கொங்கு சமுதாய மக்களுக்கு ஓர் இணைப்புப் பாலமாகவும், சென்னையில் வாழ்ந்துவரும் கொங்கு சொந்தங்களுக்கு ஓர் உறவுப் பாலமாகவும், சமுதாயச் சேவை ஒன்றே குறிக்கோளாகக் கொண்ட ஓர் அரசியல் சார்பற்ற அமைப்பாகவும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் விளங்கி வருகிறது. சங்கத்தின் சேவைகளும், செயல்பாடுகளும் அனைவரும் பாராட்டும்படி விளங்கி வருகின்றன. இப்பாராட்டுகளுக்குப் பெரிதும் காரணமாக விளங்குகின்ற சங்கத்தைத் தோற்றுவித்த முன்னோடிகளுக்கும், தொடர்ந்து சிறப்பாக சங்கத்தை நடத்திவந்த தலைவர், செயலாளர் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும், சங்கப் பணிகளுக்காகப் பல்வேறு வகைகளில் பல்வேறு சமயங்களில் நன்கொடை, நிதியுதவி,

பொருளுதவி அளித்த கொடையாளர்களுக்கும் தற்போதுள்ள செயற்குழு சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களுடைய உழைப்பால், உதவியால் சங்கம் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியதோடு, சீரிய பணிகளையும், செய்து வருகிறது. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

சென்னை இராயப்பேட்டையில் கொங்குநாடு இல்லம் – இந்த இல்லத்தில் சுமார் 100 பெண்கள் தங்கியுள்ளனர். தமிழகமெங்கிலுமிருந்தும் வரும் கொங்கு சமுதாயப் பெண்கள் தங்குவதற்கு சகல வசதிகளுடன் கூடிய இல்லமாக இது விளங்குகிறது. சென்னை இராயப்பேட்டையில் வெள்ளிவிழா இல்லம் – சங்கத்தின் வெள்ளிவிழாவையொட்டி கட்டி முடிக்கப்பட்ட இந்த இல்லத்தில் வெளியூர்களில் இருந்து வரும் சமுதாய மக்கள் குறைந்த செலவில் நல்ல பாதுகாப்புடன் கூடிய சிறந்த வசதிகளுடன் தங்கிப் பயன்பெறுகின்றனர். மேலும் IAS, IPS போன்ற Civil Services தேர்வுகளுக்குப் பயிற்சி பெறும் மாணவர்கள் இங்கு தங்கிப் பெரிதும் பயன்பெறுகின்றனர்.

ஆண்டுதோறும் குடும்பவிழா சிறப்பாக நடத்தப்படுகிறது. மாணவர்கள் மற்றும் பெண்களுக்கு விளையாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கோலப்போட்டி, கட்டுரைப் போட்டி, மாறுவேடப்போட்டி போன்றன நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெறும் கொங்கு சமுதாய மாணவர்களுக்கு பரிசும், பாராட்டும் வழங்கப்படுகிறது. பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு கொங்குமாமேதை, கொங்குமாமணி, கொங்கு சாதனையாளர், கொங்கு வேளாண் சாதனையாளர், கொங்கு இளம் சாதனையாளர் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டு, கௌரவிக்கப்படுகிறார்கள். ஒருவரையொருவர் சந்திக்கவும், உரையாடவும், உறவை வளர்க்கவும், மகிழவும், சமுதாய ஒற்றுமையை வளர்க்கவும், சான்றோர்களின் அனுபவங்களை, அறிவுரைகளைக் கேட்கவும் இந்த ஆண்டு விழாக்கள் பெரிதும் பயன்படுகின்றன.

ஆண்டுதோறும் வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. கொங்கு கல்வியாளர்கள் நடத்தும் கல்லூரிகளில் சில ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்க சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

வேலை வாய்ப்பு முகாம், மருத்துவ முகாம், கல்வி விழிப்புணர்ச்சி முகாம் போன்றவை நடத்தப்படுகின்றன.

மாதந்தோறும் சங்கம் சார்பாக செய்தி மடல் வெளியிடப்படுகிறது. அனைத்து உறுப்பினர்களுக்கும் இலவசமாக அனுப்பப்பட்டு வருகிறது. இணையதளத்திலும் வெளியிடப்படுகிறது. சான்றோர்களின் கட்டுரை, கவிதை, கொங்கு சமுதாய முக்கியச் செய்திகள், திருமணத் தகவல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளைத் தாங்கி வரும்

செய்திமடல் அனைவரது வரவேற்பையும் பெற்றுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் தீரன் சின்னமலை பிறந்தநாள் மற்றும் நினைவு நாள்களில் கிண்டியில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு சங்க நிர்வாகிகள் மற்றும் கொங்கு சொந்தங்கள் மாலை அணிவித்து மரியாதை செய்கின்றனர்.

தற்போது சங்க வளர்ச்சியில் மேலும் ஒரு மைல்கல்லாக பெருகிவரும் தேவைகளைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள இரண்டு இல்லங்களுக்கு அருகிலேயே இம்மாளிகை உருவாக்கப்பட்டு, இன்று திறப்பு விழா காண்கின்றது. பல இன்னல்களையும், தடைக்கற்களையும், நிதிப் பற்றாக்குறையையும் கடந்து இந்தச் சாதனை படைக்கப்பட்டுள்ளது என்றால் அது மிகையல்ல.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கமும், கொங்கு நாடு அறக்கட்டளையும் இணைந்து 2005-06 ம் ஆண்டு இம்மாளிகைக்கான இடத்தை ரூ. 1 கோடியே 20 இலட்சம் கொடுத்து வாங்கின. அப்போது சங்கத்திற்குத் தலைவராக திரு. கே.பாலசுப்பிரமணியன் அவர்களும், செயலாளராக திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்களும் இருந்தனர். கொங்கு நாடு அறக்கட்டளையின் தலைவர் அருட்செல்வர், செயலாளர் திரு.டி.கே. சுப்பிரமணியம் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்து பேசி திரு.பாலசுப்பிரமணியன் மற்றும் திரு. மோகன் அவர்களும் பெரும் முயற்சி எடுத்து அன்றைய செயற்குழு உறுப்பினர்களின் ஒப்புதலோடு, இந்த முடிவு எடுக்கப்பட்டு, இடம் வாங்கப்பட்டது. பின்னர் ரூ. 10 இலட்சம் கொங்கு நாடு அறக்கட்டளைக்கு முதல் தவணையாகக் கொடுத்துவிட்டு, சங்கமே இடத்தைத் தன் பெயரில் பதிவு செய்து கொண்டது. இந்தப் பேருதவிக்காக, கொங்குநாடு அறக்கட்டளைக்கு, குறிப்பாக அதன் தலைவர் அருட்செல்வர், கொங்கு மேதை டாக்டர் நா.மகாலிங்கம் அவர்களுக்கு சங்கம் தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

மேலும் இதற்கு உறுதுணையாக இருந்த முன்னாள் தலைவர் திரு.கே.பாலசுப்பிரமணியன், திரு.எம்.முருகேசன், திரு.டி.கே.சுப்ரமணியன், திரு.அருணாசலம், திரு.ஜெம்.வீரமணி, மூத்த வழக்கறிஞர் திரு.இரா.காந்தி ஆகியோருக்கும் சங்கம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இடத்தை சங்கத்தின் பெயரில் பதிவு செய்ய எல்லா ஏற்பாடுகளையும் செய்து உதவிய செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் திரு. வி.பி. செங்கோட்டுவேல் அவர்களுக்கு சங்கம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாளிகைக்கான அடிக்கல் நாட்டு விழா 07-06-2006 அன்று சங்கத்தின் முன்னாள் தலைவரும், கொங்கு சமுதாய வளர்ச்சிக்கும், கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபட்டு வரும் திரு.கே.பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. கொங்கு சாதனையாளர் விருது பெற்றவரும், தமிழகத்தின் சிறந்த Architect களில் ஒருவருமாகிய திருமதி பாரதி செங்கோட்டுவேல் அவர்கள் ஊதியம் எதுவும் பெற்றுக்கொள்ளாமல் இக்கட்டடத்திற்கான வடிவமைப்பைச் சிறந்த

முறையில் உருவாக்கித் தந்துள்ளார். அவருக்கு சங்கம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.இக்கட்டடத்தைக் கட்டி முடிக்கும் பொறுப்பாளராக சங்கம் என்னை நியமித்தது. சங்கத்திற்கு இன்னும் சிறப்பாகப் பணியாற்றக் கிடைத்த நல்ல வாய்ப்பாகவே நான் இதைக் கருதுகிறேன். இந்தப் பொறுப்பை எனக்களித்த சங்கத்தின் மற்ற நிர்வாகிகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இக் கட்டடத்தை கட்டி முடிப்பதில் பல சிக்கல்களும், சிரமங்களும் கடந்த 45 மாதங்களில் ஏற்பட்ட போதிலும், சமுதாய மக்களுக்காகப் பணியாற்றுகிறோம் என்ற எண்ணத்திலும், இப்பணியில் துணை நின்ற சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. கே.ஆர்.பி.மோகன், பொருளாளர் திரு.ஆர்.செல்வராஜ் மற்றும் சங்க நிர்வாகிகள் கொடுத்த ஊக்கத்திலும் சிரமங்கள் மறைந்து ஒரு சாதனை நிகழ்த்திவிட்ட மகிழ்ச்சி தோன்றுகிறது. இந்தச் சாதனையின் பெருமை சங்கத்தைச் சேரும். ஏதும் குறைகள் இருந்தால் அது என்னை மட்டுமே சேரும் எனப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மூன்று தளங்களைக் கொண்ட இம்மாளிகையின் மொத்த பரப்பளவு 2144.80 சதுர அடியாகும். மொத்தம் 14 அறைகளைக் கொண்ட இம்மாளிகையின் ஒவ்வொரு அறையும் 176 சதுர அடி பரப்பளவு கொண்டதாகும்.

இடத்தையும் சேர்த்து இதுவரை இம்மாளிகைக்காக ரூ. 1,78,35,916.75 செலவிடப்பட்டுள்ளது. கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினரல்லாத கொங்கு சொந்தங்கள் ஆகியோர் மூலம் இதுவரை ரூபாய் 41,00,943 நன்கொடையாக பெறப்பட்டுள்ளது. காலத்தின் அருமை கருதி ரூ.1 லட்சமும் அதற்கு மேலும் நன்கொடையளித்த கொடையாளர்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

| வ.எண். | பெயர் | நன்கொடை தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | திரு. பி.சி.துரைசாமி | 5 லட்சம் |
| 2. | அரவிந்த் ஏ.டிரேடர்ஸ் | 5 லட்சம் |
| 3. | திரு. அட்லஸ் எம்.நாச்சிமுத்து | 3 லட்சம் |
| 4. | திரு. யு.ஆர்.சின்னசாமி | 2 லட்சம் |
| 5. | திரு. எம்.சுசீந்திரன் | 2 லட்சம் |
| 6. | திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி | 1 லட்சம் |
| 7. | சோமனூர் கொங்கு வேளாளர் டிரஸ்ட் | 1 லட்சம் |
| 8. | திரு.வி.பழனிசாமி | 1 லட்சம் |
| 9. | திரு. எஸ்.அருணாசலம் | 1 லட்சம் |
| 10. | திரு. பி.சின்னசாமி | 1 லட்சம் |

போதுமான நன்கொடை காலத்தே வந்து சேராததால், கட்டடச் செலவுகளைச் சமாளிக்க நிதி திரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கொங்கு நண்பர்கள் சங்க நிர்வாகிகள் சிலரும், மற்றும் சில கொங்கு சொந்தங்களும் சங்கத்திற்கு வட்டியில்லாக் கடனாக அளித்துள்ளனர். அந்த வகையில் மொத்தம் ரூ. 36 இலட்சம் வட்டியில்லாக் கடனாகப் பெறப்பட்டுள்ளது. அவர்கள் கொடுத்த கடன் தொகையை இங்குக் கூறுவது அவசியம் எனக் கருதுகிறேன்.

| **வ.எண்.** | **பெயர்** | **கடன் தொகை (ரூபாய்)** |
|---|---|---|
| 1. | திரு. கே.கே.ரமேஷ் | 11 லட்சம் |
| 2. | சக்தி மசாலா நிறுவனம், ஈரோடு | 10 லட்சம் |
| 3. | திரு. கே.ஆர்.பி.மோகன் | 9 லட்சம் |
| 4. | திரு. எம். பொன்னுசாமி | 2 லட்சம் |
| 5. | திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் | 1 லட்சம் |
| 6. | திரு. பி.சென்னியப்பன் | 1 லட்சம் |
| 7. | திரு. வி.பி.செங்கோட்டுவேல் | 50 ஆயிரம் |
| 8. | திரு. ஆர்.சண்முகவேல் | 50 ஆயிரம் |
| 9. | திரு. எஸ்.ஆர்.ராஜேந்திரன் | 50 ஆயிரம் |
| 10. | திரு. பி.கே.ஈஸ்வரமூர்த்தி | 50 ஆயிரம் |

கொங்கு நாடு அறக்கட்டளைக்கு மீதி தொகையை (ரூ. 40 இலட்சம்) கொடுக்கவும், மீதமுள்ள சில வேலைகளுக்காகவும், கட்டடத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காகவும், வட்டியில்லாக் கடனாக வாங்கப்பட்டுள்ள தொகையைத் திருப்பித் தருவதற்காகவும், மொத்தமாக ரூ. 1 கோடியே 1 லட்சம் ரூபாய் இன்று தேவைப்படுகிறது. சங்கச் செயற்குழுவில் ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்தது ரூ. 1000/- நன்கொடை கட்டட நிதிக்காக அளித்திட வேண்டும் எனத் தீர்மானம் இயற்றி, அதன் பிறகு செய்தி மடல் வாயிலாக பலமுறை வேண்டுகோள் விடப்பட்டும் 3,550 பேர் உறுப்பினர்களாக உள்ள இச்சங்கத்தில் இதுவரை 903 உறுப்பினர்கள் மட்டுமே நன்கொடை அளித்துள்ளனர் என்பதை இங்கு வேதனையுடனும், வருத்தத்துடனும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். 'சிறுதுளி பெருவெள்ளம்' என்ற முதுமொழிக்கேற்ப மீதமுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் ரூ. 1000/- மட்டும் கொடுத்தாலே ரூ. 26 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் எளிதாக சங்கத்திற்குக் கிடைக்கும். சங்கத்திற்காக, சமுதாயத்திற்காக உழைக்க நாங்கள் தயாராக உள்ளோம்; உழைத்து

வருகிறோம். ஒவ்வொருவரும் கொங்கு சமுதாயத்திற்கு ஆற்றவேண்டியக் கடமையாகக் கருதி, தங்கள் சிறுபங்கினை இனியும் காலம் தாழ்த்தாது வழங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். சங்கப் பணிகளுக்கு சமுதாயப் பெரியோர்களின் ஒத்துழைப்பு எப்போதும்போல் இனியும் கிடைக்க வேண்டும் என பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இக்கட்டட நிதிக்கு நன்கொடையளித்த பேருள்ளம் கொண்ட பெருந்தகைகளுக்கும், வட்டியில்லாக் கடனாகக் கொடுத்து உதவிய கொங்கு கொடையாளிகளுக்கும், கட்டடம் கட்ட உழைத்த அனைவருக்கும், குறிப்பாக கட்டடம் கட்ட முடிவெடுத்து பெருந்துணை நின்ற முன்னாள் தலைவர் திரு.கே.பாலசுப்பிரமணியன் மற்றும் அமரர் மோகன் அவர்களுக்கும், கட்டடம் கட்ட சிறப்பாகப் பணியாற்றிய மேஸ்திரிகள்

| **வ.எண்.** | **மேஸ்திரி பெயர்** | **பணி** |
|---|---|---|
| 1. | சூரிய நாராயணன், சண்முகம் & அண்ணாதுரை | கட்டட மேற்பார்வை |
| 2. | அசோகன் | பிளம்பர் |
| 3. | ராஜேந்திரன் | எலக்ட்ரீசியன் |
| 4. | பாஸ்கர் & ஆதம்பாய் | பெயிண்டர் |
| 5. | பூபதி | ஃபால்ஸ் சீலிங் |
| 6. | லட்சுமணன் | PVC Window |
| 7. | முத்துக்குமார் & மகேந்திரன் | எலிவேசன் |
| 8. | முத்துசாமி & அஜீஸ் | கார்பெண்டர் |
| 9. | திபேஷ் | டைல்ஸ் |
| 10. | பூபதி | SS Handle & Rolling Shutter |
| 11. | பழனியப்பன் & ஸ்ரீகாந்த் | லிப்ட் |
| 12. | சரவணன் | இன்ஜினியர் |

ஆகியோர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். இம்மாளிகை பல தடைகளைத் தாண்டி சிறப்பாக அமைந்துள்ளதென்றால் அதற்கு தீரன் சின்னமலையின் அருள்தான் காரணம் எனக்குறிப்பிட விரும்புகிறேன். இந்த விழாவில் கலந்து கொண்டுள்ள அனைத்து சான்றோர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஜெம் குழுமத் தலைவர் கொங்குமாமணி திரு.ஜெம் வீரமணி அவர்களின் வாழ்த்துரை :**

"நாம் எல்லோரும் சேர்ந்து இம்மாளிகை திறப்பு விழா நடத்துவது மனதுக்கு மிகவும் திருப்தியாக உள்ளது. கொங்கு நண்பர்கள் சங்கத்தைத் தோற்றுவித்த




முன்னோடிகளுக்கு, குறிப்பாக திரு. கோவை செழியன், பேராசிரியர் பழனிசாமி ஆகியோருக்கும், சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைப்பையும், பொருளுதவியையும் தங்களால் முடிந்த அளவுக்குக் கொடுத்த கொங்கு சொந்தங்களுக்கும், கொங்கு நாடு இல்லம் மற்றும் வெள்ளிவிழா இல்லம் கட்ட உதவிய, உழைத்த அனைவருக்கும் நம்முடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். இம்மாளிகைக்கு தீரன் சின்னமலை எனப்பெயர் வைத்தது மிகவும் பொருத்தமானது. தியாகம், வீரம், உழைப்பு ஆகியவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்த தீரன் சின்னமலை சிலை கிண்டி தொழிற்பேட்டையில் நிறுவப்பட்டு, முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சிலை திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. அந்த சிலைக்கான ஓவியத்தை வரைந்து, மற்றவர்களுடன் இணைந்து சிலையை உருவாக்கிய திரு. சிவகுமார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 5000 அடி உயரமுள்ள ஏற்காடு மலையிலிருந்து ஒரு பெரும் பாறையைக் கொண்டுவந்து இந்தச் சிலையை உருவாக்கியதில் பங்கு கொண்டதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

மறைந்த மாபெரும் தலைவர்கள் எல்லாம் - ஒன்று கல்லுக்குக்கீழே அல்லது கல்லுக்கு மேலே. கல்லுக்குக் கீழே என்றால் சமாதி, மேலே என்றால் சிலை. அந்த அளவுக்குச் சிறப்பு வாய்ந்தது கல். உழைக்கும் விவசாயிகளுக்குக் கல்லும் மண்ணும் தான் முக்கியமானது. கல் இருந்தால்தான் தண்ணீர் நிற்கும். இளம் வயது கல் என்றால் அதன் வயது 60 கோடி ஆண்டுகள். முதுமையான கல் என்றால் அதன் வயது 100 கோடி ஆண்டுகள். பாறையிலிருந்து கல் எடுத்த கொங்கு மண்ணிலிருந்து வந்தவர்கள் நாம். உழைப்பிற்கும், சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவதற்கும் பெயர் பெற்ற கொங்கு மண்ணிற்கு நம்மால் இயன்ற உதவிகளையும் நற்செயல்களையும் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இம்மாளிகையில் ஒரு நூலகம் அமைக்க வேண்டும் என்று திரு. விசி.பெருமாள் அவர்கள் கூறிய ஆலோசனை வரவேற்கத்தக்கது. மற்ற இன மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் தனியாகவே ஒரு நூலகம் அமைக்கலாம். மற்ற இன மக்களும் ஏற்றுக்கொள்ளும்படியான நல்ல காரியங்களை கொங்கு மண்ணிற்குப் பெருமை சேர்க்கும்படி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இம்மாளிகைக்கு என்னுடைய உதவியைப் பிறகு அறிவிப்பேன்".

**கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவைத் தலைவர் கொங்கு மாமணி திரு. திருச்சி தேவராசன் அவர்களின் வாழ்த்துரை** :-

"தீரன் சின்னமலை மாளிகை கட்டி திறக்கப்பட்டுள்ளது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையால் கூட இது போன்ற சாதனையைச் செய்ய முடியவில்லை என்பது ஏக்கமாகவும், வருத்தமாகவும் உள்ளது.



திரு.வி.சி.பெருமாள் பேசும்போது கொங்கு நண்பர்கள் சங்கம் ஆரம்பிக்கவும், நம்முடைய சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவும் பெரிதும் பாடுபட்ட திரு. கோவை செழியன் அவர்களுக்கு சங்கத்தில் சிலை வைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். இது மிகவும் மகிழ்ச்சியளிக்கச் கூடியதாகும். இது நிறைவேற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய இனத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது தவறு என்றும், அதை மீண்டும் முன்னேறியவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என சில சக்திவாய்ந்த வேறினத்தைத் சேர்ந்தவர்கள் அரசிடம் முறையிட்டனர். நம்முடைய சமுதாயத்திற்கு வரவிருந்த பேராபத்தை உணர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரூர் முத்துக்கவுண்டர் அவர்கள், தமிழகமெங்கும் தனித்தனியாக செயல்பட்டுக் கொண்டிருந்த அனைத்து சங்கங்களின், அமைப்புகளின் நிர்வாகிகளை சென்னை அசோகா ஓட்டலுக்கு 13-09-1988 அன்று வரவழைத்து விரிவாக ஆலோசனை செய்ததன் விளைவாக கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை தொடங்கப்பட்டது. தலைவராக திரு. கோவை செழியனும், அமைப்பாளராக திரு. அரூர் முத்துக்கவுண்டர் அவர்களும், பொதுச்செயலாளராக திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி அவர்களும், பொருளாளராக என்னையும் தேர்ந்தெடுத்தனர். அதன் பிறகுதான் தீரன் சின்னமலையின் பெருமையும் புகழும் பரவத் தொடங்கியது. நம்முடைய ஒற்றுமையையும், பலத்தையும் கண்டு வரவிருந்த பேராபத்து நீங்கியது. நம் சமுதாயத்தில் இன்னும் 50% மக்கள் கிராமங்களில் வறுமையில் வாடும் நிலைதான் உள்ளது. எனவே நம் சமுதாயத்தை மிகவும் பிறப்டுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் அல்லது நம் சமுதாய மக்கட்தொகைக்கு ஏற்றவாறு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். கொங்கு வோளாளக் கவுண்டர்கள் பேரவை மட்டும் இருந்தால் அரசு நம்மை எதற்கும் அழைக்காது. அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இயலாது. அரசியல் கட்சியாக மாறினால்தான் நம்மை அழைப்பார்கள். எனவேதான் கொங்கு நாடு முன்னேற்றக் கழகம் பேரவை மாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. மற்றபடி இரண்டு அமைப்பும் ஒன்றுதான்.

இம்மாளிகையில் நம்முடைய சமுதாய மக்கள் தங்குவதற்கேற்ப வாடகை குறைவாக நிர்ணயிக்க வேண்டுகிறேன். இந்தச் சமுதாயத்திற்காக கட்டப்பட்டுள்ள இம்மாளிகை உருவாக உழைத்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துடன் ரூ. 1,00,000/- நன்கொடையாக அளிக்கிறேன்"

**சென்னை இராஜ்பார்க் ஓட்டல் தலைவர் திரு. பி.தேவராஜ் அவர்களின் வாழ்த்துரை :-**

" இம்மாளிகை கட்டி முடிக்கப்பட்டுள்ளது சமுதாயத்திற்கு ஓர் அவசியமான, அடிப்படையான பணியாகும். சமுதாயத்திற்குச் சிறந்த சேவை புரியவல்ல இப்பணியைச் சிறந்த முறையில் முடித்துக் கொடுத்துள்ள செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



1994-95 ஆண்டு திரு. அருணாசலம் அவர்கள் சங்கத் தலைவராகவும், நான் துணைத்தலைவராகவும், திரு. கே.பாலசுப்பிரமணியன் அவர்கள் செயலாளராகவும் இருந்த சமயத்தில் நமக்கென்று ஒரு கட்டடம் கூட இல்லாதிருந்த நிலையில் தற்போதுள்ள கொங்கு நாடு இல்லத்தைக் கட்ட எவ்வளவு சிரமப்பட்டோம், உழைத்தோம் என்பதை அனைவரும் அறிவார்கள். அப்போது இராஜ் பில்டர்ஸ் என்ற நிறுவனத்தை நான் நடத்திவந்ததால் நம்மால் முடியும் என்று உறுதியாக நம்பி, கட்டடத்தைக் கட்டி முடித்தோம். அப்போதே IAS, IPS போன்ற பணிகளுக்குப் படிக்கும் சமுதாய மாணவர்கள் தங்குவதற்கு இடம் கொடுக்கப்பட்டது. ஆனால் தற்போது மனித நேய அறக்கட்டளை அளிப்பது போன்ற பயிற்சிகள் ஏதும் அளிக்கவில்லை. இனிமேலாவது இதுபோன்ற பணிகளுக்குத் தேர்வு எழுதும் மாணவர்களுக்குத் தகுந்த வசதிகளும், பயிற்சிகளும் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாணவர்கள் அரசுப் பணிகளில் அதிக அளவில் சேர இதுவழிவகுக்கும்.

அடுத்து, சென்னையில் சங்கத்திற்கென்று ஒரு சமுதாயக்கூடம் இல்லாதது ஒரு குறையாக உள்ளது. இதுபோன்ற நிகழ்ச்சிகளையும், ஆண்டுவிழா நிகழ்ச்சிகளையும் காமராஜர் அரங்கம் போன்ற வாடகை மண்டபங்களில் நடத்தி வருகிறோம். ஒரு சமயம் சுமார் 2½ ஏக்கர் நிலம் விலைக்கு வந்தது. நம் மூத்த வழக்கறிஞர் திரு. காந்தி அவர்களிடம் சட்ட ஆலோசனை பெற்றோம். சில தவிர்க்க முடியாத காரணங்களால் அதை வாங்க இயலாமற் போயிற்று. தற்போது நம் சமுதாயத்தில் நல்ல நிலையில் உள்ளவர்கள் பலர் உள்ளனர். ரூ. 20 கோடி, 30 கோடி என்றால் கூட தமிழகமெங்கிலும் உள்ள கொங்கு சமுதாயத்தினரிடம் வசூலித்து நம்மால் பெரிய அளவில் சமுதாயக் கூடங்கள் கட்ட முடியும். இதை நிறைவேற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்மால் முடியும் என்பதற்கு கோவை மாநாடு ஓர் எடுத்துக்காட்டு. மூன்றே மாத்தில் சாதித்துக்காட்டினோம். எனவே நம் சங்க நிர்வாகிகளும், இளைஞர்களும் இப்பணிகளை எடுத்து முடிக்க வேண்டுகிறேன். இவ்வளவு சிரமத்துக்கிடையே இம்மாளிகையை உருவாக்க இடம் கொடுத்தவர்கள். கட்டடம் கட்டியவர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்".

**கொங்குநாடு முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி அவர்களின் வாழ்த்துரை**



"சென்னையில் கொங்கு நண்பர்கள் சங்கம் துவக்கப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் இராயப்பேட்டையில் ஓர் ஓட்டு வீட்டை விலைக்கு வாங்கினர். அப்போது செயலாளராக இருந்த முன்னாள் தமிழ்நாடு மின்சார வாரியப் பொறியாளர் திரு. கோவிந்தசாமி, கொங்கு நாடெங்கும் சுற்றி, ரூ. 200, ரூ. 300, என்று நன்கொடை வசூல் செய்து இந்த இடத்தை வாங்க உதவினார். அந்த ஓட்டுக் கட்டடத்தை இடித்துவிட்டுத்தான், திரு. அருணாசலம் அவர்கள் தலைவராகவும், திரு. பி.தேவராஜன் அவர்கள் துணைத் தலைவராகவும், திரு.கே.பாலசுப்பிரமணியன் அவர்கள் செயலாளராகவும் இருந்த போது தற்போதுள்ள கொங்கு நாடு இல்லத்தைக் கட்டினார்கள். அதற்குப் பிறகு வெள்ளிவிழா இல்லமும், தற்போது மூன்றாவதாக இம்மாளிகையும் கட்டப்பட்டுள்ளது. இந்த 15 ஆண்டுகளில்தான் சங்கத்திற்கு மூன்று கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதனால் கொங்கு சமுதாயத்திற்குப் பெருமை சேர்ந்துள்ளது.

சென்னையில் நம் சமுதாய மக்கள் வசதியாக உள்ளனர். ஆனால் சங்கக் கூட்டங்களில் பலர் கலந்து கொள்வதில்லை. குறிப்பாக மகளிர் முன்வருவதில்லை. இந்நிலை மாற வேண்டும். நம்முடைய சமுதாயத்தில் பெரும்பாலானோர் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் உள்ளனர். சிலர் கொங்கு நாடு முன்னேற்றக் கழகம் என்ற கட்சி தேவைதானா என முணுமுணுக்கிறார்கள். அதை விளக்கக் கடமைப்பட்டுள்ளேன். சென்னையில் சங்கம் ஆரம்பித்து 50 ஆண்டுகள் ஆகின்றன. கொங்கு நாடெங்கும் கொங்கு இளைஞர் அணி, கொங்கு இளைஞர் மன்றம் போன்றவைகள் தோற்றுவிக்கப்பட்டன. பின்னர் கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையும் ஆண்டு தொடங்கப்பட்டது. இருப்பினும் இந்த அமைப்புகளால் அரசிடம் இருந்து எந்த உரிமையையும் பெற முடியவில்லை. திருப்பூரில் கலைஞர் சிவகுமார், கலைஞர் சத்யராஜ் ஆகியோரைக் கொண்டு கலைவிழா நடத்தி ஒரே நாளில் 50 லட்ச ரூபாய் கொங்கு சமுதாயத்திற்காக வசூலித்துக் கொடுத்தோம். பலவித சிரமங்கள், தொல்லைகள், இடையூறுகள் வந்தபோதிலும் அவைபற்றிக் கவலைப்படாமல் கட்சியை நடத்திக்கொண்டிருக்கும் எங்களை சென்னையில் இருப்பவர்கள் ஊக்கப்படுத்த வேண்டும். எங்கள் தொழில்கள் பாதிப்பிற்குள்ளானால் கூட சமுதாயத்திற்காக உழைக்க கட்சி நடத்துகிறோம். கொங்கு நாட்டிற்குக் காரியங்கள் செய்து முடிக்க, கொங்கு சமுதாய மக்களுக்குச் சலுகைகள் பெற்றுத்தர கட்சி இருந்தால்தான் அவை சாத்தியமாகும்.

கோவையில் மாபெரும் மாநாடு நடத்தி கட்சியை ஆரம்பித்த பிறகுதான், நம்மை எல்லோரும் திரும்பிப் பார்க்கிறார்கள். முன்னாள் முதல்வர் ஒரு முறையும், இந்நாள்

முதல்வர் இரண்டு முறையும் கட்சி நிர்வாகிகளை அழைத்துப் பேசியுள்ளனர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 6 லட்சம் வாக்குகள் வாங்கினோம். இந்த அளவுக்கு ஓட்டு வாங்கியதால்தான் தமிழக அரசு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை கோவையில் நடத்த முடிவெடுத்தது. 15 ஆண்டுகளாக நம்முடைய அமைப்புகள் தொடர்ந்து கோரிக்கை வைத்தும், அரசு தீரன்சின்னமலை பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடவில்லை. ஆனால் இந்த ஆண்டு தீரன் சின்னமலை பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது. இது நாம் பெற்ற ஓட்டுக்களால் தானே தவிர வேறில்லை. நாம் கட்சி ஆரம்பித்தது மற்ற கட்சிகளை ஒழிக்க அல்ல. நம்முடைய சமுதாயத்தை மேம்படுத்தத்தான்.

கொங்கு நாடு புறக்கணிக்கப்படுகிறது. 10 மாவட்டங்களில் கொங்கு சமுதாய மக்கள் பெரும்பான்மையாக உள்ளனர். அரசுக்கு 48 சதவீதம் வருவாய் இந்த 10 மாவட்டங்களில் இருந்து கிடைக்கிறது. தமிழகத்தில் உள்ள 31 மாவட்டங்களில் மொத்தம் 4200 கோடி ரூபாய் முத்திரைத்தாள் விற்பனையில் கொங்கு நாட்டில் மட்டும் 1800 கோடி ரூபாய் விற்பனை, மொத்தம் 8000 கோடி ரூபாய் சாராய விற்பனையில் (TASMAC) கொங்கு நாட்டில் மட்டும் 5800 கோடி ரூபாய் விற்பனை, மொத்தமுள்ள 1,50,000 சரக்கு வாகனங்களில் கொங்கு நாட்டில் மட்டும் 95,000 சரக்கு வாகனங்கள், மொத்தமுள்ள 5000 தனியார் பேருந்துகளில் கொங்கு நாட்டில் மட்டும் 3200 பேருந்துகள். இவ்வளவு வருவாயை அரசுக்கு இந்தப் பத்து கொங்கு மாவட்டங்களும் ஈட்டித் தந்தாலும் இம்மாவட்டங்களின் வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசு போதுமான நிதி ஒதுக்குவதில்லை. நாமக்கல் மாவட்டம் கல்வி மாவட்டம் என்றே அழைக்கப்படும் அளவுக்கு கல்வித்துறையில் அரசுக்கு வருவாயை ஈட்டித் தருகிறது. இருப்பினும் அரசு ஓரவஞ்சனை காட்டும் நிலையே இருந்து வந்தது.

இந்த நிலையில் கட்சி ஆரம்பித்த காரணத்தால் இன்று கோவை மாவட்டத்தில் மட்டும் 17 இரயில்வே மேம்பாலங்கள் கட்டப்பட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 6 லட்சம் ஓட்டுக்கள் வாங்கியதால் இந்தச் சலுகைகளைப் பெற்றுள்ளோம். இனிவரும் தேர்தல்களில் 12 லட்சம் ஓட்டுகள் வாங்கினால், நமது இனத்தை MBC ஆக அறிவித்துவிடுவார்கள்.

சங்கத்திற்கு ஓட்டுவீடு வாங்கும்போது ரூ. 500/- நன்கொடையாகக் கொடுத்தேன். அப்போது என் வசதியும் அவ்வளவுதான் இருந்தது. அதை இடித்து கட்டடம் கட்டும்போது ரூ. 10,000/-, இரண்டாவது கட்டடம் கட்ட ரூ. 25,000/- என்று நன்கொடை கொடுத்துள்ளேன். தற்போது இந்த மாளிகைக்கு ரூ. 2 லட்சம் கொடுக்கிறேன்''.

**திருப்பூர் ராம்ராஜ் காட்டன் தலைவர் திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்களின் வாழ்த்துரை**

“இம்மாளிகையை சிறப்பான வகையில் கட்டி முடித்துள்ள கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கு எனது வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். பட்டன், ஜிப், ஓட்டை, தையல் போன்ற எதுவும் இல்லாமல் இலட்சக்கணக்கான வேட்டிகளை

செய்கின்ற நிறுவனத்தை நடத்துபவன் நான்.சென்னையில் உங்களையெல்லாம் பார்க்கும்போது கொங்கு வேளாளர்கள்தானா என்று சிறிது சந்தேகம் கூட வருகிறது. காரணம் சென்னையில் பெரும்பாலானோர் வேட்டி அணிந்து வருவதில்லை. சங்கத்திற்குப் பணியாற்றுபவர்களை ஊக்கப்படுத்துவதும், அவர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்குவதும் அவசியம். பொருளாதாரம்தான் முக்கிய அடிப்படைத் தேவை. அனைவரும் சங்கத்திற்குத் தங்களாலான நிதியுதவியை வழங்கவேண்டும். இம்மாளிகை கட்ட இடம் கொடுத்ததோடு அன்பளிப்பாக ரூ. 20,000 பணமும் கொடுத்த டாக்டர் சின்னிகிருஷ்ணன் தம்பதியருக்கும், மாளிகையை அல்லும் பகலும் அயராதுழைத்து, அருமையான வகையில் கட்டிக்கொடுத்துள்ள செயலாளர் திரு.பரணி பாலசுப்பிரமணி அவர்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். கொங்கு சொந்தங்கள் அனைவரும் நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் பெற்று வாழ்ந்திட வாழ்த்தி, கட்டட நிதியாக ரூபாய் இரண்டு இலட்சம் வழங்குகிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்".



**தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களின் வாழ்த்துரை** :-

"நேற்று (17-04-2010) தீரன் சின்னமலையின் பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது. அதற்கு அடுத்தநாள் இன்று (18-04-2010) இந்தத் தீரன் சின்னமலை மாளிகை திறப்புவிழா நடைபெறுகிறது. இது இந்த விழாவின் தனிச்சிறப்பாகும். கொங்கு வேளாளர்களின் தனித்த பண்பு விருந்தோம்பலும், நன்றி கூறலும் ஆகும். சிறப்புமிக்க இம்மாளிகையைக் கட்டிய கொங்கு நண்பர்கள் சங்க நிர்வாகிகளுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக இக்கட்டடத்தைக் கட்டி முடிக்கும் பொறுப்பையேற்று உழைப்பைக் கொட்டி அனைவரும் போற்றும் வண்ணம் சிறப்பாகச் செயல்பட்ட திரு. பரணி பாலு அவர்கள் தனக்கு அன்பளிப்பாக திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்களால் வழங்கப்பட்ட தங்க ஆபரணத்தைச் சங்கத்திற்கு நன்கொடையாக தந்துவிட்ட செயலைப் பாராட்டுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.



"அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடு இன்றி நீர்நிறைந் தற்று"

என்கிறார் வள்ளுவர். அதாவது சுற்றத்தாரோடு உளங்கலந்து பழகும் குணமில்லாதவனுடைய வாழ்க்கை பயனற்றதாகும். அவ்வாறு சுற்றம் சூழ வாழாதான் வாழ்க்கை கரையில்லாத குளத்தில் நீர் நிறைந்ததற்கு ஒப்பாகும்.

உலகமே சொந்தம் தான். அதில் ஒரு பகுதியான கொங்கு வேளாளர்கள் இனம் பல்வேறு சிறப்புகளுடையது. உழைப்பு, விருந்தோம்பல் போன்ற அருங்குணங்களைக் கொண்ட கொங்கு வேளாளர்கள் இறுதியில் சொர்க்கத்திற்குச் செல்வார்கள் எனக்

கூறலாம். புதிய வீடு திறப்பு விழாவிற்குச் செல்பவர்கள் 'மொய்' வைப்பது கொங்கு வேளாளர் பண்பு. அதற்கேற்ப, நான் ரூ. 20,000 மொய்ப்பணமாக அளிக்கிறேன். இது என்னுடைய தகுதிக்கான தொகை. விழாவிற்கு வந்துள்ள அனைவரும் தத்தம் தகுதிக்கேற்ப, மொய் கொடுக்க வேண்டும் என அன்போடு உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்".

**முன்னாள் காவல்துறை கூடுதல் தலைவர் V.C.பெருமாள் IPS அவர்களின் வாழ்த்துரை** :-

"இந்த விழாவில் பங்கேற்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இது சங்கத்தின் குடும்பவிழா போல் அல்ல. இது மாறுபட்ட விழா. கொங்குமாவீரன்தீரன் சின்னமலை பெயரால் அவர் நினைவாக இம்மாளிகை திறக்கப்பட்டுள்ளது என்பது மிக்க மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது.



இந்த நேரத்தில் நம்முடைய இனத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பாடுபட்டு வெற்றி கண்ட அமரர் கோவை செழியன் அவர்களை நோக்கி எனது நினைவு செல்கிறது. சென்னையில் கொங்கு நண்பர்கள் சங்கம் ஆரம்பிக்க மூல காரணமாக இருந்தவர் திரு.கோவை செழியன் அவர்கள். திரு. கோவை செழியன் காட்டிய வேகத்தை, நம் செயலாளர் திரு. பரணி பாலு அவர்களிடம் காண்கிறேன். சங்கத்திற்காக உழைக்கும் திரு. பாலுவிற்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்மினத் தலைவர்கள் இனி செய்ய வேண்டியது என்னவென்றால், நம்மினத்தை MBC ல் சேர்க்க முயற்சிக்க வேண்டும். அப்படி செய்தால்தான் நம்மின இளைஞர்கள் முன்னேற முடியும். நம்முடைய மார்கண்டேயர் திரு.சிவக்குமார் அவர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். திரு.கோவை செழியன் ஓவியத்தை வரைந்து கொடுக்க வேண்டும். அதை தீரன் சின்னமலை மாளிகையில் வைக்க வேண்டுகிறேன்.திரு. சைதை துரைசாமி அவர்கள் வெற்றிகரமாக நடத்திவரும் மனித நேய அறக்கட்டளை போன்று, சங்கமும் IAS / IPS படிக்க விரும்பும் மாணவர்களுக்கு தக்க உதவியும், பயிற்சியும் அளிக்க வேண்டும். மேலும் சங்கத்தில் நல்ல வசதிகளுடன் கூடிய நூலகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

இந்த வேண்டுகோள்களுடன் சங்கம் மேன்மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்''.

**ஈரோடு சக்தி மசாலா நிறுவனங்களின் இயக்குநர் திருமதி சாந்தி துரைசாமி அவர்களின் வாழ்த்துரை** :



"இந்த விழா ஓர் இனிய விழா. இங்கிருக்கும் ஒவ்வொரு நிமிடமும், எனக்கு அமரர் திரு.கே.ஆர்.பி. மோகன் நினைவு வந்து கொண்டிருக்கிறது. அவருக்கு இந்த நேரத்தில் எனது அஞ்சலியைச் செலுத்துகிறேன். திரு.பரணி பாலு சிறப்பாகச் செயல்பட்டு வருவதோடு, இம்மாளிகைக்காக நிறைய பாடுபட்டு சிறப்பாகச் செய்து முடித்துள்ளார்.

அதற்காக எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு.பாலு அவர்கள் அனைவரும் பாராட்டும் வண்ணம் சமுதாயச் சேவை செய்வதற்கு முக்கியக் காரணமாக உள்ள அவருடைய மனைவிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமீபத்தில் திரு.பாலுவின் தந்தையாரைப் பார்த்தபோது 'நாட்டிற்கும் வீட்டிற்கும் உழைக்கும் மகனைத் தந்ததற்காக உங்களுக்கு எனது வாழ்த்துக்கள்' என்று தெரிவித்தேன். கொங்கு சமுதாயம் ஒற்றுமையின்றி கிடக்கிறது எனப் பலரும் கூறுகிறார்கள். நம்முடைய தமிழக முதல்வர் கூட இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளார். இந்த நிலை-ஒருவர் காலை இன்னொருவர் வாரும் நிலை மாற வேண்டும்.

திரு. சைதை துரைசாமி அவர்கள் செய்வது போல் IAS பயிற்சியை நம் மாணவர்களுக்கு அளிக்க முடியவில்லையே என்ற மனவருத்தம் இருந்த போதிலும், கல்விப் பணிக்காக நிறைய செய்து வருகிறோம். கொங்கு இல்லத்தில் உள்ள ஒரு பெண்ணுக்கு IAS படிக்க உதவி செய்து வருகிறோம்.

கொங்கு மண்டலம் உழைப்பிற்குப் பெயர் பெற்றது. ஆனால் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுக்கும் தன்மை வேண்டும். நம்முடைய சிலம்பொலி செல்லப்பனார் கூறியது போல, நமது சமுதாயம் கரையில்லாத குளமாக இல்லாமல் சுற்றம் தழுவி ஒற்றுமையுடன் வாழவேண்டும். சென்னை சங்கம் நிறைய செய்ய முடியும். சங்கத்திற்கு எங்கள் பங்காக ரூபாய் பதினைந்து இலட்சம் கொடுத்துள்ளோம் எனக்கூறிக்கொள்கிறேன்."

**NSIT மற்றும் MGM நிறுவனங்களின் தலைவர் கொங்குமாமணி திரு.எம்.முருகேசன் அவர்களின் வாழ்த்துரை**:-

"சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வரலாற்றில் மேலும் ஒரு மைல்கல்லாக இம்மாளிகை கட்டப்பட்டு, இதன் திறப்புவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. நேற்று தீரன் சின்னமலையின் பிறந்த நாள் விழா. இன்று (18-04-2010) தீரன் சின்னமலை மாளிகை திறப்பு விழா. இது மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது.



"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்றார் வான்புகழ் வள்ளுவர். இக்கூற்றிற்கேற்ப, இம்மாளிகை கட்டும் பொறுப்பை திரு.பரணி பாலு அவர்கள் ஏற்றபோதே இந்தக் குறளை மெய்ப்பித்துக்காட்டுவார் என உறுதியாக நம்பினேன். அதே வகையில் மிகவும் அழகாக, அருமையாக, சிறப்பாக இந்த மாளிகையைக் கட்டி முடித்துள்ளார். நவீன வசதிகள் கொண்டதாகவும் கொங்கு கலாச்சாரம், பாரம்பரியம், பண்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியதாகவும் இம்மாளிகை எழிலுறக் கட்டப்பட்டுள்ளது. மூன்றரை ஆண்டுகள் அயராது உழைத்து, முயற்சி செய்து, அனைவரும் பாராட்டும் வண்ணம் இம்மாளிகையை உருவாக்கிய திரு.பரணி பாலு அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

இக்கட்டடம் கட்ட முக்கியக் காரணமாக விளங்கிய அமரர் கே.ஆர்.பி.மோகன் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியையும், உழைப்பையும், தொண்டையும் எண்ணிப் பார்க்கும் தருணமாக இது அமைந்துள்ளது. சொந்தப் பணத்தை வட்டியில்லாக் கடனாகக் கொடுத்து உதவிய திரு.மோகன் அவர்கள் மேலுலகிலிருந்து பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதில் ஐயமில்லை.

கலையம்சம் கொண்டு பலரும் பாராட்டும்படி இம்மாளிகையை வடிவமைத்த திருமதி பாரதி செங்கோட்டுவேல் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இம்மாளிகையை உருவாக்குவதில் பங்கு கொண்ட சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் எனது வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாளிகை வாங்கும்போது கொங்கு நாடு அறக்கட்டளை சார்பாக பணம் கொடுத்து உதவிய அருட்செல்வர் டாக்டர் என்.எம். அவர்களுக்கு கொங்கு நண்பர்கள் சங்கம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. பல சாதனைகளைச் செய்துள்ள சங்கத்திற்கு இம்மாளிகை ஒரு முத்தான சாதனையாகும்.

இந்த நேரத்தில் இரண்டு வேண்டுகோள்களை வைக்க விரும்புகிறேன்.

**முதலாவது** :- நகரத்தார்க்கு இந்தியன் பேங்க் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் பேங்க், செட்டியார்களுக்கு கரூர் வைஷ்யா பேங்க், நாடார்களுக்கு தமிழ்நாடு மெர்க்கண்டைல் பேங்க் போன்றவை இருப்பது போல், நம்மினத்தவருக்கு ஒரு வங்கி ஆரம்பிக்க வேண்டும். அப்போதுதான் நம்மின மக்கள் போதுமான நிதியுதவி பெற முடியும். இதற்காக அனைவரும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும்.

**இரண்டாவது** :- நம் சமுதாயத்தில் தற்போது 20% மக்கள் நல்ல நிலையில் உள்ளனர். தொழிலதிபர்களாகவும், உயர் அலுவலர்களாகவும் பொறியாளர்களாகவும், மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், ஆசிரியர்களாகவும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல நிலையில் உள்ளனர். ஆனால் மீதமுள்ள 80% கொங்கு வேளாளர்கள் மிகவும் வறுமையிலும், வாட்டத்திலும் உள்ளனர். நாளெல்லாம் விவசாயத்தில் உழைத்தும், வாழ்க்கைத் தரத்தில் பின்தங்கியுள்ளனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில், வசதி படைத்த 20% மக்கள் மீதமுள்ள 80 சதவித பின்தங்கியுள்ள மக்களுக்கு உதவ வேண்டும்; வழிகாட்ட வேண்டும்; கைதூக்கிவிட வேண்டும்.

இதற்கு உதாரணமாக நம் சமுதாயச் சான்றோர் இருவரைப்பற்றி இங்கு குறிப்பிடுவது மிகவும் அவசியம் எனக் கருதுகிறேன். ஒருவர் நம்மிடையே வாழ்ந்து மறைந்த பேராசிரியர் பழனிசாமி அவர்கள். அவர் சட்டக்கல்வி இயக்குநராகவும், தேர்வாணையக் குழு உறுப்பினராகவும் இருந்தபோது, அவரால் பயன்பட்ட கொங்கு சமுதாய இளைஞர்கள் ஏராளம். இன்று அவர்கள் மிக நல்ல நிலையில் உள்ளனர். கொங்கு என்று தெரிந்தாலே போதும், யாருடைய பரிந்துரையும் இல்லாமலேயே உதவி செய்வார்.

இரண்டாமவர், நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழறிஞர் அண்ணன் சிலம்பொலி செல்லப்பனார் அவர்கள். அவர் இடையறாது செய்துவரும் பணிகள் இரண்டே இரண்டு தான். ஒன்று ‘உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு’ என, தமிழே பேச்சு, தமிழே

மூச்சு எனத் தமிழ்ப்பணியாற்றுவது. இரண்டு - தன்னை யார் உதவிக்கு அணுகினாலும், குறிப்பாக கொங்கு சொந்தம் யார் அணுகினாலும், அந்த வேலையைக் கடமையாகக்கொண்டு தன்னாலியன்றதைச் செய்வது. இவரால் பயன்பெற்றவர்கள் எண்ணிக்கையில் அடங்காது.

இந்த இரண்டு சான்றோர் போல மற்றவர்களும் உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அண்ணன் சிலம்பொலியார் கேட்டுக்கொண்டதற்கிணங்க எங்கள் நிறுவனம் மற்றும் குடும்பம் சார்பாக ரூ. 1,20,000 நன்கொடையளிக்கிறேன்".

**மூத்த வழக்கறிஞர் இரா.காந்தி அவர்களின் வாழ்த்துரை** :-

"சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இத்தனை பெரிய காரியங்களைச் சாதிப்பது



மிகவும் பெருமையாக உள்ளது. இந்தச் சங்கத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவன் என்ற முறையில், இந்தச் சங்கம் எதற்காக, எப்படித் தொடங்கப்பட்டது என்பதைச் சொல்ல விழைகிறேன்.

1962-1963 ஆம் ஆண்டு சென்னையில் சுமார் 200 கொங்கு வேளாளர் குடும்பங்கள் தான் இருந்தன. அப்போது மைலாப்பூரில் ஒரு கொங்கு நண்பரின் மனைவி அம்மை நோய்ப்பட்டு இறந்து விட்டார். அண்டை, அயலார் யாரும் அவருக்கு உதவ முன்வரவில்லை. உடலை அடக்கம் செய்ய யாரும் உதவவில்லை. ஆறுதல் கூறவும் அருகில் யாரும் வரவில்லை. அந்த நேரத்தில் திரு.கோவை செழியன், அவர் மனைவி திருமதி கமலா ஆகியோருடன் நானும் மற்றும் ஏழு அல்லது எட்டு பேர்கள் மட்டும் சென்று அந்த கொங்கு நண்பருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தோம். அந்தக் காலத்தில் கொங்கு சமுதாயத்தில் சென்னையில் தொழிலதிபர்கள் யாரும் கிடையாது. 95% அரசு ஊழியர்கள். மீதமுள்ளவர்கள் வழக்கறிஞர்கள் மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள். இந்தச் சம்பவத்தால் தான் அப்போது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் துவக்கப்பட்டது. முதலில் துணைத் தலைவர் பதவி மட்டும் உருவாக்கப்பட்டு பேராசிரியர் பழனிசாமி பொறுப்பேற்றார். தலைவர் பதவி காலியாகவே வைக்கப்பட்டு, 1964ல் அருட்செல்வர் அவர்கள் முதல் தலைவராகப் பொறுப்பேற்றார். முதலில் திருவல்லிக்கேணி PTC திரு.மாரப்பன் இல்லத்திலும், பின்னர் மயிலையில் பட்டக்காரர் இல்லத்திலும் சங்கக் கூட்டங்கள் நடந்தன. ஒவ்வொருவரிடமும் ரூ 5 மட்டுமே வசூலித்தோம். அப்போது அதுவே பெருந்தொகையாக இருந்தது முன்னாள் தலைவர் திரு. சென்னியப்பன் அவர்கள் 'பணம் மட்டும் மிச்சம் வைக்க வேண்டாம், அவ்வப்போது செலவு செய்து விடுங்கள்' என்று கூறுவார். இந்த 40 ஆண்டுகளில் நம்முடைய வளர்ச்சி அபரிதமானது; வியக்கத்தக்கது. நம்மில் பலர் வருமான வரி கட்டுகிறோம்.

கொங்கு நண்பர்கள் சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவன் என்ற முறையில் உங்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்".

**(குறிப்பு : திரு.சிவகுமார் மற்றும் திரு.அட்லஸ் நாச்சிமுத்து அவர்களின் வாழ்த்துரை அடுத்த இதழில் )**

## குடும்ப விழா 2010

# 2010 ஆம் ஆண்டுக்கான, சாதனையாளர் விருது மற்றும் இளம் சாதனையாளர் விருது

சங்கத்தின் சார்பில் சென்னையில் நடைபெறும் குடும்பவிழாவில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமைதேடித்தந்துள்ள சாதனையாளர்களுக்கு " கொங்கு சாதனையாளர்" விருதும், படித்துக்கொண்டு இருக்கும் போது தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு 'கொங்கு இளம் சாதனையாளர்' விருதும் வழங்கப்பட உள்ளன. இந்த ஆண்டு குடும்ப விழா காமராஜர் அரங்கத்தில் 22-08-2010 அன்று நடைபெற உள்ளது. 2010 ஆம் ஆண்டிற்கான 'கொங்கு சாதனையாளர்' விருது மற்றும் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்க, தங்களுக்குத் தெரிந்த தங்கள் பகுதியைச் சார்ந்த சாதனையாளர்களின் விபரங்களைப் புகைப்படத்துடன் சங்க அலுவலகத்திற்கு ஜீலை 5ம் தேதிக்குள் அனுப்பிவைக்குமாறு சங்க உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- பரணி கே.பாலசுப்பிரமணி, செயலாளர்

❖❖❖❖❖

# 10 மற்றும், +2 மாணவர்களுக்குப் பணமுடிப்பு, பதக்கம்

2010 ஆம் ஆண்டு 22-08-2010 அன்று நடைபெறவிருக்கும் குடும்பவிழாவில் இவ்வருடம் 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் மூன்று கொங்குச் சமுதாய மாணவ, மாணவிகளுக்கு வெள்ளிப்பதக்கமும், பணமுடிப்பும் வழங்கப்படும். விழாவிற்கு வந்துபோக பயணக்கட்டணம், தங்கும் வசதி போன்றவை அளிக்கப்படும். தகுதியுடைய மாணவ, மாணவியர் சங்கத்திற்கு ஜீலை 20ம் தேதிக்குள் விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்துடன் சமுதாயச் சான்றிதழ் நகல், மதிப்பெண் பட்டியல் நகல், புகைப்படம் ஆகியவை கட்டாயம் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

- பரணி கே.பாலசுப்பிரமணி, செயலாளர்

❖❖❖❖❖

## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரியங்கா வெங்கட் |
| படிப்பு | : | B.Tech., M.Sc., |
| பிறந்த தேதி | : | 24-05-1984 |
| நிறம் / உயரம் | : | சிகப்பு / 5'8'' |
| குலம் | : | காடை |
| ஊர் | : | சென்னை |

Looking for a Chennai based boy

Contact : 9841061841 / 044-24360022

## மணமகன் தேவை

பயிரன் கூட்டம், வயது 28, B.E., (C.Sc), சென்னையில் சாப்ட்வேர் இஞ்சினியர், 5'7'' கோதுமை நிறம், திருவாதிரை 1ம் பாதம்– செவ்வாய் இல்லை - பூர்வீகம் நாமக்கல் – தந்தை ஓய்வு பெற்ற அரசு இஞ்சினியர் – சென்னையில் வாசம் – உடன் பிறப்பு, 3 மூத்த சகோதரிகள், திருமணமானவர்கள்–படித்த தகுதியான மாப்பிள்ளை தேவை.

தொடர்புக்கு

**டி.கே.சுப்ரமணியன்**

60, மேகசின் சாலை, (பட்ரோடு)
பரங்கிமலை - 2, சென்னை - 600 016
தொ.பே. : 044-22311411, 9840364348